செ.வெ.எ 782 நாள் 22-09-2008

# ஜப்பானிய மூளைக்காய்ச்சல்

15 வயதிற்குட்பட்ட குழந்தைகளை தாக்கும் தொற்று நோய்களில் “ஜாப்னிஸ் என்செபலைட்டிஸ்“ என்ற வைரஸ் நோயும் ஒன்றாகும். இந்நோய் “க்யூலக்ஸ்* என்ற கொசு மூலம் பரவுகிறது. கொக்கு, நாரை போன்ற பறவைகள் மற்றும் பன்றி போன்ற விலங்குகளில் இந்த வைரஸ் தங்கி அதிக அளவில் பெருகுகிறது. “க்யூலக்ஸ்* கொசு இந்த விலங்குகளிலிருந்து இரத்தத்தை உறுஞ்சும்போது இந்த வைரஸ்களும் கொசுவின் உடலில் சென்று பெருக்கமடைகிறது. பிறகு மனிதனை கடிக்கும்பொழுது இந்த வைரஸ் மனிதனது உடலுக்குள் சென்று மூளைக்காய்ச்சல் நோயை உண்டாக்குகிறது. பெரும்பாலும் 15 வயதிற்குட்பட்ட குழந்தைகளை பாதிக்கும் இந்நோய் கண்டவுடன் உடனடி சிகிச்சை செய்ய காலதாமதமானால் நோயாளிகள் மூளை மற்றும் நரம்பு மண்டல பாதிப்புகளுடன் இறப்பு ஏற்படலாம். தவறினால், கை கால் செயல் இழந்து மூளை வளர்ச்சியும் குன்றிவிட வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோய் (1) விழுப்புரம் (2) கடலூர் (3) பெரம்பலூர் (4) திருச்சி (5) திருவாரூர் (6) தஞ்சாவூர் (7) மதுரை (8) விருதுநகர் (9) திருநெல்வேலி (10) தூத்துக்குடி மற்றும் (11) திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் காணப்படுகிறது.

பெரம்பலூர் மாவட்டத்தில் மத்திய அரசு நிறுவனத்தால் தயார் செய்யப்படும் ஒரு வகையான ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோய் தடுப்பூசி 1994 முதல் 2007 வரை 1–14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஆறு தவணையில் போடப்பட்டது. இதன் அடிப்படையில் பெரம்பலூர் மாவட்டத்தில் ஜப்பானிய மூளை நோய் தாக்கம் மிகவும் குறைந்தது.

ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோய் தாக்கம் அதிகமாக உள்ள மாவட்டங்களில் இந்நோய் மேலும் பரவாமல் இருக்க 1 முதல் 15 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுவதே சிறந்த முறை என்று மத்திய அரசால் முடிவு செய்யப்பட்டுள்ளது. SA -14-14-2 எனப்படும் தடுப்பூசி மத்திய அரசால் இலவசமாக வழங்கப்பட்டு இச்சிறப்பு முகாமில் பயன்படுத்தப்படுகிறது. இதன் அடிப்படையில் சென்ற 2007 ஆம் ஆண்டு (1) விழுப்புரம் (2) கடலூர் (3) விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் 17 லட்சம் குழந்தைகளுக்கும், நடப்பாண்டில் மார்ச் மாதம் முடிய பெரம்பலூர் மாவட்டத்தில் 1.6 லட்சம் குழந்தைகளுக்கும் இத்தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

இந்த நிதியாண்டில் 2008–09 தமிழகத்தில் (1) மதுரை (2) திருச்சி மற்றும் (3) திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்த பரிந்துரை செய்யப்பட்டுள்ளது, இம்மாவட்டங்களில் உள்ள 22. 2 லட்சம் குழந்தைகள் பயன்பெறும் வகையில், மருத்துவ அலுவலர் முன்னிலையில்

பள்ளிகளில் இத்தடுப்பூசி திட்டம் 07.08.2008 முதல் துவங்கப்பட்டு செப்டம்பர் மாதம் இறுதி வரை செயல்படுத்த ரூ.98.7 லட்சம் மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது.

அடுத்த நிதியாண்டு 2009–10 ஜப்பானிய மூளைக்காய்ச்சல் தடுப்பூசி திட்டம் திருவண்ணாமலை, திருநெல்வேலி, மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படவுள்ளது.

மத்திய அரசால் இத்திட்டம் நடத்தப்படுகிறது. தமிழ் நாட்டில் மற்ற மாவட்டங்களில் இந்நோயின் தாக்கம் காணப்படாததால் மற்ற மாவட்டங்களில் ஜப்பானிய மூளைக்காய்ச்சல் தடுப்பூசி திட்டம் நடத்தப்படவில்லை.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9